1973 நவம்பர் 19]

பள்ளிகளுக்கு விஞ்ஞான ஆய்வுக் கூடங்கள்

* 154 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்
திரு. ஆ. பரந்தாமன் மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மோட்டார் வானில் அமைக்கப்பட்டுள்ள பரிசோதனைக் கூடங்களை அறிவியல் பரிசோதனைக் கூடம் இல்லாத பள்ளிகளுக்கு அனுப்பி வைத்து வசதி செய்து தரும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறதா?

(இ) ஆம் எனில், தற்போது எந்தெந்தக் கல்வி மாவட்டங்களில் அவ்வாறு செயல்படுத்தப்பட்டு வருகிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) சென்னை, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கோயம்புத்தூர், சேலம், வட ஆற்காடு, தென் ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

* 155 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், அய்யன்காளி பாளையம் அரசினர் உயர்நிலைப் பள்ளியில் விஞ்ஞான ஆய்வுக் கூடம் கட்டும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) இப்பள்ளியில் மாணவர்களின் எண்ணிக்கை போதிய அளவு இல்லாததால் இச்செயற்குறிப்பைப் பரிசிலிக்க இயலவில்லை.

* 156 வினா—திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன்: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கம் வட்டம், தாணிப்பாடியில் உள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளியில் விஞ்ஞான ஆய்வுக் கூடம் ஒன்று ஏற்படுத்தும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?